# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 9 செப்டம்பர் – 2016 ₹1.00




## சுதந்திர தின விழா

நமது நாட்டின் 70ஆவது சுதந்திர தினம், பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளில் 15.08.2016அன்று கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பல்கலைக்கழகத் தலைமை நிலைய வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, 25 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கு கிஸான் விகாஸ் பத்திரம் வழங்கிப் பேருரை ஆற்றினார். நிகழ்ச்சியில் பல்கலைக்கழகப் பணியாளர்களும், மாணவர்களும் பங்கேற்றனர். மேலும், துணைவேந்தர் அவர்கள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரையாற்றினார். நாமக்கல், திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர்களும், கோடுவெளி பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர், ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் முதல்வர் ஆகியோரும் தத்தம் கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தனர். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தேசிய மாணவர் படையினரின் அணிவகுப்பு நடைபெற்றது.

## சிகிச்சை முறைகள் குறித்த கருத்தரங்கு




தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் சார்பில் “கால்நடை மருத்துவ மாணவர்களுக்குப் பண்ணை மற்றும் உடன் விலங்கு மருத்துவத்தில் சிகிச்சை முறைகள்” குறித்த எட்டாவது கருத்தரங்கு, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 12.08.2016 மற்றும் 13.08.2016ஆம் நாள்களில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் கருத்தரங்கின் முதன்மைப் புரவலர் முனைவர் சு. திலகர் அவர்கள் முன்னிலையில் கருத்தரங்கைத் துவக்கிவைத்து, கருத்தரங்க மலரை வெளியிட்டார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக, சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார். ஒன்பது மாநிலங்களின் 21 கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலிருந்து கருத்தரங்கில் பங்கேற்ற 364 இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்கள் 9 அமர்வுகளில் சிகிச்சை முறைகள் குறித்த தங்கள் கட்டுரையை வழங்கினர். சிறந்த கட்டுரைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## தேசியப் பயிற்சி

- சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைச் சிகிச்சை, நன்னெறி மற்றும் சட்டவியல் துறையின் உயர் கல்வி மையத்தில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்



கழகத்தின் நிதியுதவியாலான "கால்நடை மருத்துவத்தில் வெக்டார் போர்ன் நோயைக் கண்டறிதல், நோய்த் தீர்ப்பியல் மற்றும் இரத்தயேற்றப் பயிற்சியில் நவீன முன்னேற்றம்" குறித்த தேசிய அளவிலான பயிற்சி, 03.08.2016முதல் 23.08.2016வரை நடைபெற்றது. பயிற்சியில் குஜராத், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஆந்திர பிரதேசம், தெலுங்கானா மாநிலங்களின் வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்கள் மற்றும் நமது பல்கலைக்கழகம் சார்ந்த 10 பேராசிரியர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ.) முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் மற்றும் பயிற்சிக் கையேடு வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கால்நடைச் சிகிச்சை, நன்னெறி மற்றும் சட்டவியல் துறையின் உயர் கல்வி மைய இயக்குநர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் பயிற்சியை ஒருங்கிணைத்தார்.

- நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின உயர்கல்வி மையத்தில் "இந்தியாவில் கரிமக் கோழி உற்பத்தியில் சிக்கல்கள் மற்றும் அணுகுமுறைகள்" குறித்த தேசிய அளவிலான பயிற்சி, 03.08.2016 முதல் 23.08.2016 வரை நடைபெற்றது. பயிற்சியில் குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களின் வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த 12 உதவிப் பேராசிரியர்கள் பங்கேற்றனர். பயிற்சியில் விரிவுரைகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் களப் பார்வையிடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 23.08.2016அன்று கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் பயிற்சிக் குறுந்தகடு மற்றும் கையேடு வெளியிட்டு, பயிற்சி நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### தேசிய கீதம் (ஆசாதி 70) பாடுதல் நிகழ்ச்சி



பல்கலைக்கழகத்தின் சார்பில் இளைய தலைமுறையினரிடையே சுதந்திரப் போராட்டத்தின் வலிமையை எடுத்துக்கூறும் வகையில் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் மற்றும் நிலையங்களில் பல்வேறு போட்டிகளுக்கு ஏற்பாடு செய்து, கூட்டாகத் தேசிய கீதம் பாடுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆசிரியர்களும் மாணவர்களும் தத்தமது கல்லூரிகளில் 23.08.2016அன்று காலை 11.00 மணிக்குக் கூட்டாகத் தேசிய கீதம் பாடினர்.

### சிகிச்சையியல் பயிற்சி

மலேசியாவின் கெலண்டன் பல்கலைக்கழகத்தின் 8 டிவிஎம் மாணவர்கள், உடன்விலங்கு மற்றும் அசைபோடும் விலங்குகளில் சிகிச்சையியல் பயிற்சியைச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 16.07.2016முதல் 16.08.2016வரை மேற்கொண்டனர். மருத்துவமனையின் பல்வேறு சிகிச்சைப் பிரிவுகளில் காலை வேளையிலும், அவசரச் சிகிச்சைப் பிரிவில் மாலை வேளையிலும் அவர்கள் பயிற்சி எடுத்துக்கொண்டனர்.



மேலும், 12.08.2016 மற்றும் 13.08.2016ஆம் நாள்களில் நடைபெற்ற "கால்நடை மருத்துவ மாணவர்களுக்குப் பண்ணை மற்றும் உடன் விலங்கு மருத்துவத்தில் சிகிச்சை முறைகள்" குறித்த எட்டாவது கருத்தரங்கில் பங்கேற்றனர்.

### பயிலரங்கு

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உயிர்நுட்பத் தகவல் மையத்தில் "மரபணுக் கோர்வை ஒப்பாய்வுகளில் உயிர்நுட்பத் தகவலியலின் பயன்பாடுகள்" குறித்த பயிலரங்கு, 08.08.2016முதல் 12.08.2016வரை நடைபெற்றது. 12.8.2016அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 21 பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி, நிறைவுரை ஆற்றினார்.

### சிறப்பு விரிவுரை

- சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய் நிகழ்வாய்வியல் துறைமூலம் கல்லூரியின் இளநிலைப் பட்ட (2013–2014ஆம் சேர்க்கைப் பிரிவு) மாணவர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் "எலிக்காய்ச்சலைக் கண்டறியும் நவீனத் தொழில்நுட்பம்" பற்றிய சிறப்பு விரிவுரை 11.07.2016அன்று வழங்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் முனைவர் கே. நடராஜ சீனிவாசன் அவர்கள் விரிவுரை வழங்கினார்.
- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் சிறப்பு விரிவுரை 29.08.2016அன்று வழங்கப்பட்டது. அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியப் பல்கலைக்கழகத்தின் ஜிகா வைரஸ் ஆய்வுக்கூடத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் டாக்டர் வைத்தி ஆறுமுகசாமி அவர்கள் "ஜிகா வைரஸ் ஆராய்ச்சி" மற்றும் அதன் மரபியல் பண்புகள், பரவும் முறை, அறிகுறிகள் மற்றும் தற்போதைய நிலை குறித்து விரிவுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

### வளாக வேலைவாய்ப்பு முகாம்

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 2011–12ஆம் ஆண்டு சேர்க்கைப் பிரிவு இளநிலைப் பட்ட மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கு வளாக வேலைவாய்ப்பு முகாம் 29.08.2016 மற்றும 30.08.2016ஆம் நாள்களில் நடைபெற்றது. முகாமில் பங்கேற்ற மொத்தம் 80 மாணவர்களில் 24 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

## விலங்கு நலம் பேணுநர் குறித்த பயிற்சி

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறையும், பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககமும் இணைந்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியிலான "கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் செயல்திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி" குறித்த திட்டத்தில் "விலங்கு நலம் பேணுநர்" தொடர்பான ஒரு மாத காலப் பயிற்சியை, 01.08.2016முதல் 31.08.2016வரை நடத்தின. பயிற்சியை முதன்மை வனப் பாதுகாவலர் (ஓய்வு) மற்றும் சீனிவாசன் சேவை அறக்கட்டளையின் துணைத் தலைவர் டாக்டர் சி.கே. ஸ்ரீதரன் அவர்கள் துவக்கிவைத்தார். தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். பயிற்சியாளர்கள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகள்; மாதவரம், பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை மற்றும் கோழியின ஆராய்ச்சி நிலையம்; காட்டுப்பாக்கம், முதுகலை கால்நடை ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் பயிற்சி மேற்கொண்டனர். சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செசிலியா ஜோசப் அவர்கள் பயிற்சியை ஒருங்கிணைத்தார்.

## குறுந்தொழில் மேம்பாட்டுப் பயிற்சி



தேனி, உழவர் பயிற்சி மையம்மூலம் புது வாழ்வுத் திட்டத்தின் நிதியுதவியில் "கால்நடை மற்றும் நாட்டுக் கோழி" குறித்த குறுந்தொழில் மேம்பாட்டுப் பயிற்சி 28.07.2016 முதல் 18.08.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சிமூலம் ஒக்கரைப்பட்டி, நாகலாபுரம் மற்றும் அனுப்பப்பட்டி சார்ந்த 30 பயனாளிகள் பயன்பெற்றனர். 18.08.2016அன்று நடைபெற்ற பயிற்சி நிறைவு விழாவில் தேனி மாவட்ட ஆட்சியர் திரு. என். வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழும், கடனுதவிக்கான காசோலையும் வழங்கினார்.

## பயிற்சி

- தருமபுரி கால்நடைப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் நான்கு பயனாளிகளுக்குக் கறவை எருமை வளர்ப்பு குறித்த இரு நாள் பயிற்சி, 08.08.2016, 09.08.2016 ஆகிய நாள்களில் அளிக்கப்பட்டது. 09.08.2016அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில், பயனாளிகளுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.
- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் திருநெல்வேலி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகச் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிலையமும் இணைந்து கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறையில் "கோழி வளர்ப்பு" குறித்த வளாகப் பயிற்சியை 17.08.2016முதல் 23.08.2016வரை நடத்தின. மொத்தம் 20 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

## சிறப்பு ஊர்வன நல முகாம்




சென்னைப் பாம்புப் பண்ணைக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகச் சிறப்பு ஊர்வன நல முகாம் கிண்டி, சென்னைப் பாம்புப் பண்ணையில் 16.08.2016அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கட்டம் உடல் மலைப்பாம்பிற்குக் குடற்புழு நீக்கம் செய்து முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், வனவிலங்கு அறிவியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சே. பிரதாபன், சென்னைப் பாம்புப் பண்ணையின் இயக்குநர் திரு. எஸ். ராஜரத்தினம் ஆகியோர் பங்கேற்றனர். மொத்தம் 14 இந்திய மலைப்பாம்புகள் மற்றும் கட்டம் உடல் மலைப்பாம்பிற்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. உடல்நல ஆய்விற்காக நட்சத்திர ஆமை மற்றும் குளத்து ஆமைகளிலிருந்து சிகிச்சை மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

## வெறிநோய்த் தடுப்பூசி முகாம்

காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையமும் காஞ்சிபுரம், கால்நடைப் பராமரிப்புத் துறையும் இணைந்து செல்லப்பிராணிகளுக்கான வெறிநோய்த் தடுப்பூசி முகாமைக் காஞ்சிபுரம், கால்நடைப் பெரு மருத்துவமனை வளாகத்தில் 30.08.2016அன்று நடத்தின. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆர். கெஜலட்சுமி இ.ஆ.ப., அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் 125க்கும் மேற்பட்ட செல்லப்பிராணிகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டது. வெறிநோயைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் மற்றும் நாய் கடித்த காயங்களைக் கையாளும் மேலாண்மை முறைகள் பற்றிய துண்டுவெளியீடுகள் செல்லப்பிராணி வளர்ப்போர் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

## கால்நடை நல முகாமில் பங்கேற்பு

தேனி மாவட்டம், சிவலிங்கநாய்க்கன்பட்டியில் தேனி, கால்நடைப் பராமரிப்புத் துறைமூலம் 01.08.2016அன்று நடத்தப்பட்ட கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாமில் தேனி, உழவர் பயிற்சி மையம் பங்கேற்று, பல்கலைக்கழகத்தின் பல்வேறு தொழில்நுட்பங்கள் கொண்ட பல்கலைக்கழக அரங்கைக் காட்சிக்கு வைத்தது. தேனி மாவட்ட ஆட்சியர் திரு. என். வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் பல்கலைக்கழக அரங்கைப் பார்வையிட்டு, தீவன விதைகள் தானுவாஸ் தாதுப்புக் கலவை மற்றும் வெள்ளைக் கழிச்சல் குருணைத் தடுப்பூசி ஆகியவற்றைக் கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்களுக்கு வழங்கினார்.

## விழிப்புணர்வு முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் பல்கலைக்கழகம்–கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின்கீழ் "கால்நடைப் பண்ணையாளர்களுக்கு வங்கிக் கடன் வசதிகள் மற்றும் செயல்முறை விளக்கம்மூலம் அசோலாச் சாகுபடி"

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Posted on 29.09.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

குறித்த விழிப்புணர்வு முகாம் 24.08.2016அன்று திருநெல்வேலி மாவட்டம், களக்குடியில் நடத்தப்பட்டது. திருநெல்வேலி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரகச் சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிலையத்தின் திரு. எஸ். தேவராஜன் அவர்கள் வங்கியின் பல்வேறு செயல்பாடுகளை விளக்கமாக எடுத்துரைத்தார். முகாமில் மொத்தம் 23 பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பங்கேற்பு



புதுதில்லி, க்ருஷி பவனில் “கால்நடை இனப் பதிவுச் சான்றளிப்பின்” விருது வழங்கும் நிகழ்ச்சி 23.08.2016அன்று நடைபெற்றது. வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையின் செயலர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் முனைவர் திரிலோசன் மகாபதிர் அவர்கள் தலைமை வகித்த இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்றார். மேலும், பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் மற்றும் நாகர்கோவில், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் டி. ரவிமுருகன் ஆகியோர் முறையே கொடி ஆடு மற்றும் செவ்வாட்டிற்கான விருதுகளைப் பெற்றனர்.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு விருது அளிப்பு



கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் புதுதில்லி, வேளாண் அறிவியல் தமிழ் இயக்கம்மூலம் கோயம்புத்தூர், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 05.08.2016 மற்றும் 06.08.2016ஆம் நாள்களில் நடைபெற்ற இரண்டாவது நாடளாவிய வேளாண் அறிவியல் தமிழ்க் கருத்தரங்கில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்களுக்கு எம்.எஸ். சுவாமிநாதன் தமிழ்வேள் விருது அளித்துச் சிறப்பிக்கப்பட்டது.

### இரண்டாவது நாடளாவிய வேளாண் அறிவியல் தமிழ்க் கருத்தரங்கில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்பு

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் புதுதில்லி, வேளாண் அறிவியல் தமிழ் இயக்கம்மூலம் கோயம்புத்தூர், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 05.08.2016 மற்றும் 06.08.2016ஆம் நாள்களில் நடைபெற்ற இரண்டாவது நாடளாவிய வேளாண் அறிவியல் தமிழ்க் கருத்தரங்கின் பல்வேறு நிகழ்வுகளில் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர். மேலும், 61 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தனர். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர்கள் ஆர். சரவணன், எஸ். ஜெயசித்ரா, கே. சின்னமணி, பி. அன்பரசி, எம்.ஜே. ராஜா, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உதவிப் பேராசிரியர் ஆர். ரமணி, திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர்கள் என். அருள்நாதன், கே. மோகனாம்பாள், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர்கள் பி. பூவராஜன், என். பாபு பிரசாத் ஆகியோர் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்கியதற்கான விருதுகளைப் பெற்றனர். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பட்டதாரி உதவியாளர் பிரகாஷ் மற்றும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதுநிலைப்பட்ட மாணவர் வி. நவீன்குமார் ஆகியோரும் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்கியதற்கான விருதுகளைப் பெற்றனர்.

### பணி ஓய்வு



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் அலுவலகத்தின் கணக்கு அலுவலர் செல்வி எஸ். ரேவதி அவர்கள் 31.08.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 12.08.1958இல் பிறந்த இவர், 30 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலக அறிவியல் துறையின் உடனாள்(சிறப்பு நிலை) திரு. பி. முருகேசன் அவர்கள் 31.08.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 31.08.1958இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.